**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.1/2023**
**In**
**O.S.No.206/2023**

1. ராஜேஸ்

2. சண்முகம் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பூமயில்

2. மாரியப்பன்

3. ஞானவேல் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 16.02.2024ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. A. கருப்பையா, பி.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. திருவருட்செல்வம், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (28.02.2024) இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, தாவாச் சொத்தின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்களோ அவரது ஆட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சலும் இடையூறும் செய்யக்கூடாது என்றும், 1ம் மனுதார் இடத்திற்குள் சுமார் 3 அடி அகலம் கிழமேலாகவும், 105 அடி தென்வடலாகவும் EFGH தாவா பகுதியில் சுமார் 1 1/2 அடி அகலம் கிழமேலாகவும், 107 அடி தென்வடலாகவும் வாதிகளின் இடத்தில் ஆக்கிரமித்து சட்ட விரோதமாக

வீடு கட்டி வருவதால் மேலும் வீடு கட்டுவதை நிறுத்தி வைக்கும்படி எதிர்மனுதாரர் மீது இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளையும், ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளையும் வழங்கிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதாரர்கள் தங்களது மனுவில், தாவா சொத்து வாதிகளின் தாத்தா மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தின் பட்டா எண்.420 சர்வே எண்.308/6 என்றும், அதன் விஸ்தீரணம் 0.9.00 ஏர்ஸ் 22 செண்ட் என்றும், மேற்படி மீனாட்சிசுந்தரம்பிள்ளை கடந்த 06.12.1982ம் தேதியன்று இந்த நிர் 1ம் பிரதிவாதியின் கணவரும் 2ம் பிரதிவாதியின் தந்தையுமான சோமசுந்தரம் என்பவருக்கு மொத்த சொத்து செண்டு 22ல் கீழ்புறம் 4 7/8 (நாலேமுக்காலே அரைக்கால் செண்டு) இடத்தை பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அதன்பின்பு சர்வே எண்.308/6 சப்டிவிஷன் செய்யப்பட்டு 308/6A விஸ்தீரணம் 0.7.00 ஏர்ஸ் பட்டா எண் 785 மீனாட்சிசுந்தரம் பெயரிலும் 308/6B விஸ்தீரணம் 0.2.00 ஏர்ஸ் பட்டா எண் 4026 1, 2 பிரதிவாதிகள் பெயரிலும் இருந்து வருவதாகவும், இதில் தாவா என்பது உத்தேச வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ABCD பகுதியான கிழமேல் சுமார் 5 அடி தென்வடல் 105 அடி 1வது லக்க சொத்தாகவும் மற்றும் உத்தேச வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள EFGH பகுதியான கிழமேல் சுமார் 1 1/2 அடி தென்வடல் 107 அடி 2வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளதாகவும், தாவாச் சொத்து உள்பட மொத்த சொத்தும் ஆதியில் வாதிகளின் தாத்தா மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு செல்லம், வேலுச்சாமி, ஆறுமுகம், சங்கிலியாபிள்ளை என்ற நான்கு மகன்கள் உள்ளதாகவும், மேற்படி மீனாட்சிசுந்தரம் மற்றும் இதர நான்கு வாரிசுகளும் சேர்ந்துதான் மேற்படி சோமசுந்தரம் என்பவருக்கு கடந்த 06.12.1982ம் தேதியன்று பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள 0.7.00 ஏர்ஸ் அளவுள்ள இடத்தை மேற்படி மீனாட்சிசுந்தரம் கடந்த 30.05.1986ம் தேதியன்று 1ம் மனுதாரின் வாரிசுகளுக்கிடையே பாகவிஸ்தி செய்து 6 பாகமாக பிரிவினை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வாதிகள் மற்றும் அவரது பங்காளிகள் தாவாச் சொத்து

உள்பட அவரவர் இடத்தினை அனுபவம் செய்து வருவதாகவும், அதில் கடந்த 01.03.2002ம் தேதியன்று வாதிகளின் தந்தை சங்கிலி என்பவர் மற்ற பங்காளிகளுக்கு பாகத்தில் கிடைக்கப்பெற்ற பாகச்சொத்துக்களை நல்லம்மாள், ராக்கம்மாள், செல்லம்பிள்ளை ஆகியோர்களிடம் இருந்து பதிவு கிரையமாக கிரையம் பெற்று மேற்படி சங்கிலி அனுபவித்து வந்ததாகவும், மேற்படி சங்கிலியின் மகன்கள் மேற்படி வாதிகள் என்றும், மேற்படி சங்கிலியும் கடந்த 20.08.2008ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், அவரது இறப்புக்கு பின்பு வாதிகள் அனுபவம் செய்து வருவதாகவும், இவ்வாறு கடந்த சுமார் 3 ஆண்டுகளாக வாதிகள் தாவாச் சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும், தாவா 1வது இலக்க சொத்திற்கு மேற்கே உள்ள வாதிகள் மற்றும் அவரது வகையறாக்கள் தாவா 1வது இலக்க சொத்து வழியாகத்தான் செல்லவேண்டும் என்றும், 5 அடி பாதையை 30.05.1986ம் தேதியன்று பாகவிஸ்தி செய்து கொண்ட ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளதாகவும், தாவா 2வது இலக்க சொத்தை 06.12.1982ம் தேதிய கிரையப்பத்திரத்தில் பொதுச்சுவருக்கும் மேற்கு என நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர்கள் தங்களது மனுவில், பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள் என்றும், தற்போது பிரதிவாதிகள் அந்த வீட்டை இடித்துவிட்டு மனுதாரர்கள் கிரையம் பெற்ற இடத்திற்குள் வீட்டை கட்டாமல் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா இடத்தை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக வீடு கட்டி வருவதாகவும், அதாவது தாவா ABCD பகுதியில் சுமார் 3 அடி அகலம் கிழமேலாகவும், 105 அடி தென்வடலாகவும் தாவா EFGH பகுதியில் சுமார் 1 1/2 அடி அகலம் கிழமேலாகவும், 107 அடி தென்வடலாகவும் வாதிகளின் இடத்தில் ஆக்கிரமித்து சட்ட விரோதமாக வீடு கட்டி வருவதாகவும், 1ம் வாதியும் உடனே கட்டிடம் கட்டுவதை தடுத்து நிறுத்த கோரி கடந்த 19.09.2023ம் தேதியன்று மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து அது மனு எண் 1634/2023 என விசாரணை செய்ததில் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி வாதி கொடுத்த புகாரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு யாதொரு பாத்தியமோ அனுபவமோ உரிமையோ கிடையாது என்றும், பிரதிவாதி கடந்த 15.09.2023ம் தேதி முதல் வாதிகளுடன் கொண்ட முன்பகையின் காரணமாக வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்தும்

வாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து சட்ட விரோதமாக வீடுகட்டி வருவதாகவும், எனவே இதனடிப்படையில் பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆகையால் தாவாச் சொத்தின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்களோ அவரது ஆட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சலும் இடையூறும் செய்யக்கூடாது என்றும், 1ம் மனுதார் வீட்டிற்குள் சுமார் 3 அடி அகலம் கிழமேலாகவும், 105 அடி தென்வடலாகவும் EFGH தாவா பகுதியில் சுமார் 1 1/2 அடி அகலம் கிழமேலாகவும், 107 அடி தென்வடலாகவும் வாதிகளின் இடத்தில் ஆக்கிரமிப்பு சட்ட விரோதமாக வீடு கட்டி வருவதால் மேலும் வீடு கட்டுவதை நிறுத்தி வைக்கும்படி எதிர்மனுதாரர் மீது இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளையும் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளையும் வழங்கிட உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்:**

எதிர்மனுதார்கள் தங்களது எதிர்உரையில், தாவா சொத்து வாதிகளின் தாத்தா மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதையும் அப்போதைய பட்டா எண் 420ல் சர்வே எண் 308/6ல் விஸ்தீரணம் 0.9.00 ஏர்ஸ் 22 செண்ட் என்பதை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்வதாகவும், மேலும் கடந்த 06.12.1982ம் தேதி 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான சோமசுந்தரத்திற்கு மேற்படி சொத்தில் கீழ்புறம் 4 7/8 (4.875 செண்ட்) இடத்தை பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் மேற்படி மீனாட்சி சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம் செட்டியார் அவருக்கு கிரையம் செய்து கொடுத்ததாகவும், அதன்பின்பு மேற்படி சர்வே எண்.308/6 சப்டிவிஷன் (Subdivision) செய்யப்பட்டு சர்வே எண். 308/6A மற்றும் 6B ஆக பிரிக்கப்பட்டு 308/6B விஸ்தீரணம் 0.2.00 ஏர்ஸ் பட்டா எண் 4026 பிரதிவாதிகளின் பெயரில் இருந்து வருவதை ஒப்புக்கொள்வதாகவும், இதில் தாவா A, B, C, D மற்றும் E, F, G, H பகுதிகளில் வாதிகள் சொந்தம் கொண்டாடுவதை பிரதிவாதிகள் மறுப்பதாகவும், தாவா சொத்து ஆதியில் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு சொந்தமானது என்றும், அதை அவர் கடந்த 06.12.1982ம் ஆண்டு சோமசுந்தரத்திற்கு கிரையம் செய்து கொடுத்ததாகவும், அதன்பின்பு மேற்படி மீனாட்சிசுந்தரம்பிள்ளை கடந்த 30.05.1986ம் தேதியன்று சொத்தை ஆறு பாகமாக பிரிவினை செய்து கொடுத்ததை வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், மேலும் வாதிகளின் தந்தை சங்கிலி மற்ற

பங்காளிகளிடமிருந்து கடந்த 01.03.2002ம் தேதி கிரையம் பெற்றதை வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், மேலும் மேற்படி சங்கிலி இறந்த பின்பு வாதிகள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் மறுப்பதாகவும், மேலும் தாவா 1வது இலக்க சொத்துக்களுக்கு மேற்கே உள்ள வாதிகள் தாவா சொத்து வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பதை பிரதிவாதிகள் மறுப்பதாகவும், மேலும் 5 அடி பாதையை 30.05.1986ம் தேதியன்று பாகவிஸ்தி செய்து கொண்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது பொய் என்றும், அது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், 30.05.1986ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், மேற்படி பாகவிஸ்தியை செய்து வைத்த மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாகவிஸ்தி செய்வதற்கு நான்கு ஆண்டுகள் முன்பே சோமசுந்தரத்திற்கு கடந்த 06.12.1982ம் தேதியன்று ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரத்தில் பொது பாதை என்று எதையும் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி கிரைய பத்திரத்தில் "பிரதிவாதிகள் கைவசம் இருக்கின்ற இடத்திற்கு கிழக்கு" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே அது பொது பாதையல்ல என்றும், அதன்பின்பு ஒரு பதிவு செய்யப்படாத பாகவிஸ்தி ஆவணத்தின் மூலம் 5 அடி பாதை உள்ளதாக வாதிகள் கூறுவது பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும் கடந்த 06.12.1982ம் தேதி கிரையப்பத்திரத்தில் பொது சுவருக்கு மேற்கு என நான்குமாலில் காட்டுவது பொய் என்றும், உண்மையில் மேற்படி கிரைய ஆவணத்தில் "வேலாயுதம் செட்டியார் ரைஸ் மில் கட்டிடத்திற்கும், பொது சுவருக்கும் மேற்கு" என்று காட்டப்பட்டுள்ளதாகவும், இதிலிருந்து பிரதிவாதிகளின் இடத்திற்கு கிழக்கே வேலாயுதம் செட்டியார் என்பவரது ரைஸ்மில் இருந்ததாகவும், தாவா E, F, G, H பகுதியில் ஒன்றரை (1 1/2) அடி அகலம் 107 அடி நீளம் வாதிகளுக்கு சொந்தம் என்பதை வாதிகள் பிராதில் தெளிவுபடுத்தவில்லை என்றும், வாதிகளுக்கு உரிமை பாத்தியமோ, உடைமை பாத்தியமோ இல்லாமல் வாதிகள் A, B, C, D பகுதியையும் E, F, G, H பகுதியையும் பிரதிவாதிகள் ஆக்கிரமித்ததாக கூறுவது சட்டத்திற்கு எதிரானது மட்டுமல்லாமல் வாதிகள் பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் உள்நோக்கத்துடன் வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில், பிரதிவாதிகள் கடந்த 06.12.1982ம் தேதி வாதிகளின் தாத்தா மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் இருந்து

மேற்படி சொத்துக்களை கிரையம் பெற்றவுடன் கடந்த 1984ம் ஆண்டு பிரதிவாதிக்கு சொந்தமான மொத்த செண்ட் 4.87ல் சுமார் 1971.6 (18.6 * 106 சதுர அடி) கட்டிடமும் மீதம் உள்ள இடத்தில் சுற்றுச்சுவரும் கான்கிரீட் கட்டிடம் கட்டி அதற்கு அப்போதைய மானாமதுரை பேரூராட்சியிடமிருந்து குடிநீர் இணைப்பு பெற்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெற்றும் தொடர்ச்சியாக ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், அதே வேளையில் வாதிகள் பிரதிவாதிகளின் மேற்குப்பக்கத்தில் அமைந்துள்ள இடத்தை புதர் மண்டிய காடாக அனுபவம் ஏதும் செய்யாமல் இருந்து வந்ததாகவும், பிரதிவாதிகள் சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்பே வீடு கட்டி குடியிருந்து வந்து, பின்பு சாலையின் மட்டம் உயர்ந்து மழை தண்ணீர் வீட்டிற்குள் வந்ததாலும் வீடு பழசாகி விட்டதாலும் அதை இடித்து விட்டு பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் புதிய வீடு கட்டி வருவதாகவும், தற்போது கட்டப்படும் கட்டிடம் காம்பௌண்ட் சுவரிலிருந்து இரண்டு அடி கிழக்கு நோக்கி தள்ளி ஏற்கனவே பிரதிவாதிக்கு சொந்தமான அதே இடத்தில் கான்கிரீட் வீடு கட்டி வருவதாகவும், மேற்படி பிரதிவாதிகளின் இடத்தில் பிரதிவாதிகள் கட்டுமான பணிகளை கடந்த 20.01.2023ம் தேதி பணியை ஆரம்பித்துவிட்டதாகவும், அதை வாதிகளும் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு பிரதிவாதிகள் கடந்த செப்டம்பர் மாதம் பிரதிவாதிகளது வீட்டிற்கு மேற்கூரை அமைப்பதற்காக கான்கிரீட் ரூப் சென்ட்ரிங் அமைப்பதற்காக வேலை ஆரம்பித்த போது வாதிகள் பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் பொய்யான புகார் மனுவை மானாமதுரை காவல் நிலையத்தில் கொடுத்து கட்டப்பஞ்சாயத்து செய்ததாகவும், விசாரணையில் இது முழுக்க சிவில் வழக்கு என்பதும் வாதிகளின் கெட்ட நோக்கத்தையும் அறிந்து கொண்ட விசாரணை அதிகாரி உரிய நீதிமன்றத்தில் அணுகி நிவாரணம் தேடிக்கொள்ள அனுமதித்து புகாரை முடித்து விட்டதாகவும், உண்மையில் தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு கடந்த 1982ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தின் படி உரிமையுடைய சொத்து என்றும், அதுமுதல் பிரதிவாதிகள் எந்தவித வில்லங்க ஆக்கிரமிப்பு ஏதுமின்றி வாதிகளின் கண் முன்பே கடந்த 40 வருடங்களுக்கு மேலாக சுற்றுச்சுவருடன் கூடிய வீடு அமைத்து வில்லங்க விக்கிரங்கள் ஏதுமின்றி ஆண்டு அனுபவித்து வருவதாகவும், இதில் வாதிகளுக்கு கடுகு அளவு கூட சொந்தமோ, உரிமையோ அல்லது அனுபவ பாத்தியமோ கிடையாது என்றும், வாதிகளின் வழக்கானது நீள அகல அளவுகளை பொறுத்து வாதிகளின் பிராதில்

தெளிவான, சரியான அடி அளவுகளை குறிப்பிடவில்லை என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் 5 அடி பாதை என்றும், அதில் மூன்று(3) அடி அகலம் கிழமேலாகவும் 150 அடி தென்வடலாகவும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக கூறிவிட்டு பிராதில் சொத்து விபரத்தில் தாவா சொத்து சுமார் 5 அடி கிழமேல் 150 அடி தென்வடல் என்று முழு பாதையையும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக கூறப்பட்டுள்ளதாகவும், வாதிகளுக்கு பிரதிவாதிகளின் சொத்துக்களை பொறுத்து அடி அளவு தெரியாமல் தாக்கல் செய்திருப்பதாகவும், பிராதில் கண்டுள்ள வழக்கு மூலம் தவறானது என்றும், பிரதிவாதி கடந்த 1984ம் ஆண்டு சுற்றுச்சுவருடன் கூடிய வீடு அமைத்து சுமார் 40 வருடங்கள் குடியிருந்து தற்போது அதை சுற்றுச்சுவருக்குள் சொந்த வீடு கட்டி வருவதாகவும், எனவே வழக்கு மூலமானது வழக்கிற்காக மட்டுமே கடந்த 15.09.2023ம் ஆண்டு காண்பிக்கப்பட்டிருப்பதாகவும், பிரதிவாதிகள் கடந்த 1984ம் ஆண்டே சுற்றுச்சுவருடன் கூடிய வீடு அமைத்து சுமார் 40 வருடங்கள் குடியிருந்து தற்போது அதை சுற்றுச்சுவருக்குள் பிரதிவாதிகளின் சொந்த இடத்தில் வீடு கட்டி வருவதாகவும், எனவே பிரதிவாதிகள் வாதிகளின் கண்முன்னே அவர்களுக்கு தெரிந்தே பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் குடியிருந்து வரும் நிலையில் தற்போது அங்கு பொதுபாதை இருப்பதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும், அதோடு மட்டுமல்லாமல் வழக்கிற்காக எடுத்துக்கொண்டாலும் பிரதிவாதிகள் 40 ஆண்டு கால வாக்கில் அனுபவம் செய்து வருவதால் எதிரிடை செய்துள்ளதாகவும், எனவே காலாவதியான தோஷத்தால் பாதிக்கப்பட்ட ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

**5.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:

**கேள்வி:**

1. மனுதாரர்கள்/வாதிகள் மனுவில் கோரியவாறு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**7.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுசொத்து விபரத்தில் கண்ட சர்வே எண்.308/6ஏ 0.7.00ஏர்ஸ் செண்ட் 17.29ல் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள உத்தேச வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A,B,C,D கிழமேல் 5, தென்வடல் 105 அடி மற்றும் உத்தேச வரைபடத்தில் E,F,G,H பகுதியாக கிழமேல் 1 1/2 அடி தென்வடல் 107 அடி அளவு பகுதி மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.308/6ஏல் கண்ட சொத்தின் ஒரு பகுதி என்றும், அதனை ஆக்கிரமித்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்டுமானம் கட்டி வருகிறார்கள் என்றும், எனவே அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்கொண்டு கட்டி வரும் கட்டுமானத்தை நிறுத்தி வைக்குமாறு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டும் என்பதாகும்.

**8.** மாறாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.108/6பில் கண்ட சொத்தில் கட்டுமானம் கட்டி வருவதாகவும், மனுதாரர்கள் குறிப்பிடுவது போல மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.308/6ஏ சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லை என்பதாகும்.

**9.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இ.ம.எண்.2/2023 மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்பட்டுள்ளது. மனுதாரர்கள் முன்னிறுத்தும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 அடிப்படையில் தற்போது இம்மனுவினை பரிசீலிப்பது அசல் வழக்கின் முக்கிய பொருண்மையை பரிசீலிப்பது போன்றதாகிவிடும். மேலும் அது அசல் வழக்கின் தீர்ப்பில் பிரதிபலிக்கக் கூடும். ஆகையால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும்

வரைபடம் நீ.ம.சா.ஆ.2 அடிப்படையில் தற்போது இம்மனுவை பரிசீலிப்பது நீதியின் பால் உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் தாக்கல் செய்துள்ளதால் அதில் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகள், வழக்கின் முதல் தோற்ற வழக்கு, சமநிலை சமன்பாடு மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ளது என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். வழக்கின் தற்போதைய நிலையில் மனுதாரர்களுக்கு ஆதரவாக கொண்டு அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர் மேற்கண்ட கட்டி வரும் கட்டுமானத்தை நிறுத்துமாறு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்தால் எதிர்மனுதாரர்கள் மேற்கொள்ளப்படும் கட்டுமானம் நிறுத்தப்படும். அசல் வழக்கு முடிவடைய சிலகாலம் நீட்டித்தால் எதிர்மனுதாரர்களுக்கு பொருள்விரையம் மட்டுமின்றி மனஉளைச்சலும் ஏற்பட்டு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்படும். இதுவே ஒருவேளை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க மறுத்து எதிர்மனுதாரர்கள் கட்டுமானம் தொடர்ந்து மேற்கொண்டு வந்து இறுதியில் மனுதாரர்களுக்கு ஆதரவாக வழக்கு தீர்மானிக்கப்பட்டாலும் அசல் வழக்கில் மனுதாரர்கள் ஏற்கனவே கோரியுள்ளவாறு கட்டுமான பகுதியை இடிக்கவும், சுவாதீன ஒப்படைப்பும் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய நிலையில் மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை. வழக்கின் முதல் தோற்ற வழக்கு மனுதாரர்களுக்கு ஆதரவாக இல்லை என்றும், மனுதாரர்களுக்கு சமநிலை சமன்பாடு மனுதாரர்களுக்கு ஆதரவாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்வுகண்டு இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என மேற்கண்ட கேள்விகளுக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், இல்லை

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.09.2023 | வாதிகளின் தாத்தா மீனாட்சிசுந்தரம் பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் |
| ம.சா.ஆ.2 | 21.09.2023 | 1, 2 பிரதிவாதிகளின் கணினி பட்டா இணையவழி நகல் |
| ம.சா.ஆ.3 | 06.12.1982 | 1ம் பிரதிவாதியின் கணவர் சோமசுந்தரத்திற்கு மீனாட்சிசுந்தரம் எழுதி வைத்த கிரையப் பத்திரம் இணையவழி நகல் |
| ம.சா.ஆ.4 | 30.05.1986 | பாகப்பிரிவினை ஒப்பந்தம் நகல் |
| ம.சா.ஆ.5 | 22.01.2015 | வாதிகளின் தந்தை சங்கிலி பெயரில் உள்ள சொத்துவரி ரசீது நகல் |
| ம.சா.ஆ.6 | 24.07.2023 | வாதிகளின் தந்தை சங்கிலி பெயரில் உள்ள சொத்துவரி ரசீது இணையவழி நகல் |
| ம.சா.ஆ.7 | 2/2011 முதல் 6/2011 | வாதிகளின் தந்தை பெயரில் உள்ள தண்ணீர் கட்டண ரசீது அசல் |
| ம.சா.ஆ.8 | 24.07.2023 | வாதிகளின் தந்தை பெயரில் உள்ள தண்ணீர் கட்டண ரசீது இணையவழி நகல் |
| ம.சா.ஆ.9 | 19.09.2023 | மானாமதுரை காவல் நிலையத்தில் 1ம் வாதி கொடுத்த புகார் மனு இணையவழி நகல் |
| ம.சா.ஆ.10 | 19.09.2023 முதல் 10.10.2023 | வழக்கு தாக்கல் செய்த போது தாவா ஆக்கிரமிப்பை காட்டக்கூடிய புகைப்படம் CDயுடன் |
| ம.சா.ஆ.11 | 13.02.2024 | தாவாச் சொத்தில் ஆக்கிரமிப்பைக் காட்டக்கூடிய தற்போதைய கட்டிடத்தின் புகைப்படம் CDயுடன் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.1 | வரைபடம் |

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**